# DEPARTMENTAL EXAMINATIONS - MAY 2018

## 137 - The Account Test for Subordinate Officers - Part - II

## (Without Books)

(1) பணம் செலுத்துதல்கள் என்பது

விடை: இரண்டு பணப்பேழைகளுக்கு இடையே செலுத்துதல்

(2) கருவூலங்களில் பராமரிக்கப்படும் பணப்பேழைகளில் உள்ள ரொக்கமும் நாணயங்களும் யாருக்கு உரியது?

விடை: இந்திய ரிசர்வ் வங்கிக்கு

(3) எத்தனை மாதங்களுக்குள் 31ம் தேதிபடி நிதி இருப்பு ஏற்பு சான்று அளிக்காத பணம் பெறும் அலுவலர்களின் பட்டியல்களை நிறுத்த ஆணையை சம்பளம் வழங்கு அலுவலர் / கருவூல அலுவலர் அளிக்கலாம்

விடை: மூன்று மாதங்கள்

(4) எந்த வகையான பணம் செலுத்துதல், அரசாங்க கணக்குகள் அல்லாது ரிசர்வ் வங்கி, பாரத ஸ்டேட் வங்கி மூலம் தீர்வு செய்யப்படுகின்றன

விடை: பண பரிவர்த்தனைகள்

(5) நேரிடையாகவோ அல்லது இரண்டு கருவூலங்களுக்கிடையே செலுத்தப்படும் பணப் பரிமாற்றம் எவ்வாறு கருவூல கணக்குகளில் வகைப்படுத்தப்படுகிறது?

விடை: உள்ளூர் வழி செலுத்துதல் அயல் வழி செலுத்துதல்

(6) சார்நிலை கருவூலங்களில் நடக்கும் பரிவர்த்தனைகளை மாவட்ட கருவூலங்களுக்கு எந்த படிவத்தில் அளிக்க வேண்டும்

விடை: TA 8

(7) அரசு விதிமுறைபடி மீள அளிக்கப்படும் காலாவதி வைப்பு கருவூல கணக்கில் எவ்வாறு வகைப்படுத்தப்படுகிறது?

விடை: பலவகை மீள அளித்தல்

(8) எவையேனும் இரண்டு நீதிமன்ற வைப்புத் தொகையினை குறிப்பிடுக

விடை: உரிமை இயல் மற்றும் குற்றவியல் நீதிமன்ற வைப்புத் தொகை

(9) மாற்றல் குறிப்பாணை என்பது

விடை: தவறான வகைப்பாட்டை சரி செய்தல்

(10) வழக்கற்றுபோன மற்றும் இத்துப் போன முத்திரை வில்லைகளை எப்பொழுதும் கூட்டல் மற்றும் கழித்தல் குறிப்பாணையில் கழிக்க வேண்டும்

விடை: அவற்றை அழித்த பின்பு

(11) அரசினால் எங்கிருந்து வழிவகைகள் முன்பணம் பெறப்படுகின்றது?

விடை: இந்திய ரிசர்வ் வங்கியிடமிருந்து

(12) முதிர்வு பெற்ற கருவூலப் பட்டியல்கள் எங்கே காசாக்கம் செய்யப்படும்

விடை: அலுவலகம் அல்லது எந்த இந்திய ரிசர்வ் வங்கியில் அளிக்கப்பட்டதோ

(13) ஓர் உள்ளூர் நிதியின் வகையினை குறிப்பிடுக

விடை: முனிசிபல் நிதி

(14) எந்த ஓர் துறை அல்லது கணக்குத் தலைப்பின் கீழ் வகைப்படுத்த முடியாத பரிவர்த்தனையை எந்த கணக்கில் கணக்கீடு செய்ய வேண்டும்

விடை: வகைப்படுத்தப்படாத இனம்

(15) மாநிலத்திற்கான மைய அரசுக் கணக்கு மற்றும் தணிக்கைத் தலைவரின் அறிக்கையினை யாரிடம் அளிப்பார்?

விடை: ஆளுநர்

(16) மைய அரசுக் கணக்கு மற்றும் தணிக்கைத் தலைவரை யார் பணி நியனம் செய்வர்?

விடை: குடியரசுத் தலைவர்

(17) அரசுத் தொகுப்பு நிதியிலிருந்து மேற்கொள்ள வேண்டிய இரண்டு செலவினங்களைக் குறிப்பிடுக

விடை: ஆளுநரின் ஊதியம் மற்றும் படிகள் உயர்நீதிமன்ற நீதிபதிகளின் ஊதியம் மற்றும் படிகள்

(18) சட்டமன்றத்தில் வாக்களிப்பை பெறாமலேயே குறிப்பிட்ட சில இனங்களுக்கு மாநில அரசின் தொகுதி நிதியிலிருந்து மேற்கொள்ளும் செலவினம்

விடை: பொறுப்பேற்ற செலவு

(19) புதிய செலவினத்தின் கீழ் மேற்கொள்ளப்படும் கூடுதல் செலவினம் யாரால் அங்கீகரிக்கப்படுகிறது?

விடை: ஆளுநர்

(20) அந்த நிதியாண்டில் ஒதுக்கப்பட இருக்கின்ற செலவு மதிப்பீட்டு மான்யத்தில் ஒரு பகுதியை செலவு செய்வதற்கு முன்பணமாக கோரி சட்டப்பேரவையின் ஒப்புதல் பெறும் மான்யத்திற்கு பெயர்

விடை: நிதி ஒதுக்கீடு வாக்கெ/டுப்பு

(21) உயர்நீதிமன்றத்தின் தலைமை நீதிபதி யாரால் பணி நியமனம் செய்யப்படுவார்

விடை: ஜனாதிபதி

(22) மாநிலத்தின் எதிர்பாரா செலவு நிதி யாரால் தீர்வு செய்யப்படும்

விடை: ஆளுநர்

(23) நிதிக்குழு எத்தனை ஆண்டிற்கு ஒரு முறை அமைக்கப்படுகிறது?

விடை: 5 வருடங்கள்

(24) மாநில அரசு யாரிடமிருந்து கடன் வாங்கலாம்

விடை: இந்திய எல்லைக்குள்

(25) அனுமதிக்கப்படும் குறைந்த குடும்ப ஓய்வூதியம்

விடை: ரூ.3050

(26) அரசு மேலாண்மை கல்விக் கூடங்களில் பணிபுரியும் பயிற்சி பெற்ற ஆசிரியர்களின் ஓய்வூதிய வயது

விடை: 58 வயது

(27) ஓய்வளிப்பு ஓய்வூதியம் (Retiring Pension) என்பது எந்த அரசு ஊழியருக்கு வழங்கப்படும்

விடை: வயது முதிர்வு நாளுக்கு முன்னரே தண்டனையாக கட்டாயமாக ஓய்வு பெறுமாறு பணிக்கப்படும் அரசு ஊழியருக்கு (அ) ஓய்வு பெறுபவர்

(28) உடல் ஊனம், மன நலம் அல்லது உடல் நலமின்மையால் தொடர்பணி புரிய ஒருவர் தகுதியற்றவர் என பொதுப்பணியிலிருந்து ஓய்வு அளிக்கப்படுபவருக்கு வழங்கப்படும் ஓய்வூதியம்

விடை: நலிவு ஓய்வூதியம்

(29) இழப்பீடு ஓய்வூதியம் எந்த அரசு ஊழியருக்கு வழங்கப்படும்

விடை: அவர் பணிபுரியும் நிரந்தர பணியிடத்தை நீக்கப்படும் பொழுது

(30) பணிக்கொடை ஓய்வூதியம் வழங்க எவ்வளவு நாள் குறைந்தபட்சமாக பணிபுரிந்திருக்க வேண்டும்?

விடை: 10 அரை மாதங்கள்

(31) அரசு ஊழியருக்கு பணிக்கொடை ஓய்வூதியம் எப்பொழுது காலாவதியாகும்

விடை: வாரிசுதாரர் யார் என தெரிவிக்காத போது

(32) குடும்ப ஓய்வூதியம் கணக்கீடு செய்ய முதலில் எத்தனை சதவீதம் எடுத்துக் கொள்ளப்படும்

விடை: 30%

(33) காணாமல் போன அரசு ஊழியர் குடும்பத்திற்கு எத்தனை ஆண்டுகளுக்கு பிறகு நிதிப்பயன் அளிக்கப்படும்

விடை: 2 ஆண்டுகள்

(34) 25 ஆண்டு காலம் அல்லது அதற்கு குறைவாக பணிபுரிந்த அரசு ஊழியருக்கு பணி அடிப்படையில் எத்தனை ஆண்டுகள் அனுமதிக்கப்படும் (weightage)

விடை: 5 வருடங்கள்

(35) ஓர் அரசு ஊழியருக்கு ஓய்வூதியம் பெற எத்தனை ஆண்டுகள் பணிபுரிந்திருக்க வேண்டும்

விடை: 10 ஆண்டுகள்

(36) தகுதியுடைய பணிகாலங்கள் கணக்கீடு செய்ய எத்தனை மாதங்கள் அரையாண்டாக கணக்கில் கொள்ளப்படும்

விடை: 3 மாதங்கள்

(37) மறுபணி அமர்த்தம் செய்யப்படும் ஓய்வூதியதாரருக்கு எவ்வாறு சம்பளம் நிர்ணயிக்கப்படுகிறது?

விடை: அவர் கடைசியாக ஓய்வு பெறும் பொழுது பெற்ற சம்பளம் (ம) ஓய்வூதியத்தை விட அதிகமாக இருத்தல் கூடாது

(38) ஓய்வூதியம் மற்றும் பணிக்கொடை கணக்கீடு செய்ய கீழ்கண்ட படியினை கணக்கில் எடுத்துக் கொள்ளப்படும்

விடை: தனி ஊதியம்

(39) ஓய்வூதியதாரருக்கு வழங்கப்படும் மாதத் தொகைக்கு என்ன பெயர்

விடை: ஓய்வூதியம்

(40) அயல்நாட்டு செலுத்தம் (Foreign Remittance) என்பது எதைக் குறிக்கும்?

விடை: (வேறு அரசாங்கம்) அல்லது வெளி மாநிலத்தில் செலுத்தப்படுபவை